தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. பின்வருவனவற்றுள் இலக்கணப்போலியாக அமையாத சொல்
   - i. முன்றில் iii புறநகர்
   - ii. வாயில் iv அவ்வை
2. ‘பழயன கழிதலும் புதியன புகுதலும் காலவழுவல’ என்பதில் பழயன என்பது
   - i. முதற்போலி iii மரூஉ
   - ii. இடைப்போலி iv கடைப்போலி
3. முதற்போலியாக அமையும் சொல்
   - i. மயல் iii சுகவீனம்
   - ii. கோவில் iv குடர்
4. “தேயம் விட்டு தேயம் கடந்து வந்தோம்” என்பதில் தேயம் என்பது
   - i. முதற்போலி iii இடைப்போலி
   - ii. இடக்கரடக்கல் iv கடைப்போலி
5. கடைப்போலியாக அமையாத சொல்லாய் அமைவது
   - i. அறன் iii பந்தர்
   - ii. நிலன் iv தேசம்

பகுதி 2

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக

1. “ஐவராம் அவனிபர்க்கும் நினைவு ஏது என்று அருள்புரிந்தான் அமரர் கோமான்”
   1. ஐவரும் யாவர்? அவனிபர் என்பதன் பொருள் யாது?
   2. அமரர் கோமான் என சிறப்பிக்கப்படுபவர் யார்?
2. ‘உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான் அறத்தின் உருவம் போல்வான்’
   1. உயிரனையாய் என குறிப்பிடப்படுபவர் யார்?
   2. அறத்தின் உருவம் போல்வான் யார்?
   3. சந்து எனப்படுவதன் பொருள் யாது?
   4. சந்துபட உரைத்தருள் என கூறியவர் யார்?
3. “வயிரமெனும் சுடு நெருப்பை மிக மூட்டி வளர்க்கின் உயர்வரைக்காடு என்ன”
   1. இங்கு இடம்பெறும் அணிகளை குறிப்பிடுக
   2. வரைக்காடு என்றால் என்ன?
4. “அரவுயர்ந்தோனுடன் மறுசூதாடி நீர் வென்ற அந்நாள் அவன்தான் சொன்ன விரதம் மொழி தவிராமல்”
   1. அரவுயர்ந்தோன் என்பதன் பொருள் யாது? அவ்வாறு அழைக்கப்படுபவர் யார்?
   2. விரதம்மொழி என்பதன் பொருள் யாது?
5. “போரில் இருநிலத்தை ஆள இனித்துணிவதே கடன் என்றான் எம்பிரானே”
   1. இருநிலம் என்றால் என்ன? அவ்வாறு அழைக்கப்படுவது யாது?
   2. எம்பிரான் என குறிப்பிடப்படுபவன் யார்?